**நித்தமும் மனம் உந்தன்  முகம் தேடுதே**
**தலைவா எத்தனை துயர்வந்தும் உனைத்தேடுதே**

நித்தமும் மனம் உந்தன்  முகம் தேடுதே
தலைவா எத்தனை துயர்வந்தும் உனைத்தேடுதே
தமிழினத்தின் தலைமகனே எம் நிலையை பாராயோ
தடையதனை தீர்ப்பதற்கு நீ வந்து சேராயோ
தேசத்தின் உயிர்க்காவலே உம் புலி முகம் தேடுகிறோம்
எம் பாசத்தின் உயிர்த்தோழனே உம் வீரத்தைப் பாடுகிறோம்

**நித்தமும் மனம் உந்தன்  முகம் தேடுதே**
**தலைவா எத்தனை துயர்வந்தும் உனைத்தேடுதே**

மனம் வெந்து மனம் வெந்து அலைமோதுது
மனம் மாறி சில நெஞ்சு விலை போகுது
துயர் வந்து தமிழீழம் தடுமாறுது
துரோகங்கள் இனவாழ்வில் இடியாகுது

மாவீரர் துயிலும் இல்லம் மண்மேடாய் கிடக்குது
நீ நடந்த தெருக்களெல்லாம் சிங்களமே குரைக்குது (2)
கதறி அழுகிறேன் தலைவா
கலங்கித்  தவிக்கிறேன் தலைவா
இன்னிலை மாறுமோ
தமிழீழம் சேருமோ

**நித்தமும் மனம் உந்தன்  முகம் தேடுதே**
**தலைவா எத்தனை துயர்வந்தும் உனைத்தேடுதே**

உலகத்தின் தமிழ்வாழ்வில் இருள் சூழ்ந்தது
உனைக்காண தமிழீழம் வரம் வேண்டுது
கலக்கங்கள் தீர்ப்பாயே கரிகாலனே
காலங்கள் எமதாக வா அண்ணனே

தேசத்தைக்  கொலைக்கரங்கள் இன்னும்தான் எரிக்குது
எம்தலைவன் எங்கே என்று எம்மினமே துடிக்குது (2)
கதறி அழுகிறேன் தலைவா
கலங்கித்  தவிக்கிறேன் தலைவா
இன்னிலை மாறுமோ
தமிழீழம் சேருமோ

**நித்தமும் மனம் உந்தன் முகம் தேடுதே**
**தலைவா எத்தனை துயர்வந்தும் உனைத்தேடுதே**

தமிழினத்தின் தலைமகனே எம் நிலையை பாராயோ
தடையதனை தீர்ப்பதற்கு நீ வந்து சேராயோ
தேசத்தின் உயிர்க்காவலே உம் புலி முகம் தேடுகிறோம்
எம் பாசத்தின் உயிர்த்தோழனே உம் வீரத்தை பாடுகிறோம்

**நித்தமும் மனம் உந்தன் முகம் தேடுதே**
**தலைவா எத்தனை துயர்வந்தும் உனைத்தேடுதே**